ஞாலகுருவின் படைப்புக்கள்

# இந்துமதம் – ஹிந்துமதம் பற்றி சித்தர் காகபுசுண்டர் கூறிய கருத்துக்கள்



சிவம் என்றாலேயே
ஞானம், தெளிவு, விளக்கம்,
முழுமை, இயற்கை, அழகு, வளம்,
வலிவு, நலம், நல்வாழ்வு, அன்பு,
இன்பம், உயிர், ... என்று 48
வகையான பொருள் உண்டு.
எனவே சீவநெறி => சிவநெறி =
இந்துமதம்.


இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,122 கார்த்திகை மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **"இந்துமதம்-*ஹிந்துமதம்* பற்றிய கருத்துக்கள்"** - குருதேவர் கூறி எழுதப்பட்ட குறிப்பாக இந்தக் கட்டுரை கையெழுத்து நகல்களின் தொகுப்பில் இருந்தது.
2. **"தமிழின மொழி மத விடுதலை"** - குருதேவர் அச்சிட்ட அறிவிக்கைகளில் வெளியீடு எண் 486ஆக இந்த அறிவிக்கை குறிக்கப்பட்டு உள்ளது.
3. **"செயல்விளக்கத் திருவோலை"** - மதுரைச் சித்தரடியான் ஒருவருக்கு குருதேவர் அவர்கள் 8.12.1987இல் விடுத்த அறிவுரைத் திருமடல்.
4. **"சத்தி அண்டத்துத் தேவதேவியின் அருளாட்சிப் பரிந்துரையின்படி வழங்கப்படும் நிறுவன நிருவாக அதிகாரிகள் பற்றிய குருவாணை"** - 26.12.1987இல் குருதேவர் அனைவருக்கும் வழங்கிய கட்டுரை.
5. **"செயல்விளக்கத் திருவோலை"** - சேலம் மாவட்டத்தின் இ.ம.இ. தலைமைப் பொறுப்பில் இருக்கும் இருவருக்கு குருதேவர் 11.1.1988இல் விடுத்த விளக்க அஞ்சல்.
6. **"குருபாரம்பரிய வாசகங்கள் சில..."** - தலைமைப்பீடத்தில் 22.11.1988இல் குருதேவர் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய குருபாரம்பரிய வாசகங்களில் சில.
7. **"அரசபாரம்பரியக் குறிப்புக்கள்"** - இரயில் பயணத்தின் போது குருதேவர் அவர்கள் கூறிய சில அரிய குறிப்புக்கள்.

## குருதேவரின் தந்தையார் சித்தர் காகபுசுண்டர் M.P.பிள்ளை அவர்களின்

# இந்துமதம்-*ஹிந்துமதம்* பற்றிய கருத்துக்கள்

(1) கடவுளைப் பற்றிய எந்தவிதமான தெளிவான கருத்தைக் கூறுவதுதான் *ஹிந்துமதம்*. கடவுளைப் பற்றிய மிகத் தெளிவான வரையறையான, திட்டவட்டமான, நேரடியான கருத்தைக் கூறுவதுதான் **இந்துமதம்**.

(2) கடவுளைப் பற்றிப் புரியாத அச்சமூட்டக் கூடிய, ஆபாசமான, அறிவிற்கெல்லாம் அப்பாற்பட்ட கண்மூடித்தனமான காட்டுமிராண்டித் தனமான கற்பனைகளையெல்லாம் கூறுவதுதான் *ஹிந்துமதம்*.

(3) கடவுளைப் பூசை செய்ய வேண்டும், பூசை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஊழ்வினையின் பிறவி யோகமும், மற்ற கர்ம பலன்களும் இருந்தால்தான் கடவுள் நேரில் தோன்றி அருள் புரிவார் என்று கூறுவதுதான் *ஹிந்துமதம்*.

(4) மனிதனைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் எப்பொழுதும் விழிப்பாகக் காத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு கொடுமையான, இரக்கமற்ற அதிகாரியாக அல்லது தலைவனாக அல்லது முதலாளியாக இருப்பவர்தான் கடவுள் என்று கூறுவதே *ஹிந்துமதம்*.

(5) எல்லோருக்கும் கடவுளை நேரடியாக பூசை செய்ய யோக்கியதை கிடையாது, யோகம் கிடையாது, தகுதி கிடையாது, தரம் கிடையாது, திறம் கிடையாது, அனுமதி கிடையாது; குலத்தால் தாழ்ந்தவர்கள்,

சாதியால் இழிந்தவர்கள், வருணாசிரமத்தில் தடை செய்யப்பட்டவர்கள், இழி பிறப்புக்கள், அவமானத்துக்குட்பட்டவர்கள், ஏழைகள், ... ஆகியோர் பூசை செய்யக் கூடாது; பூசை செய்யும் இடத்திற்குள்ளும் போகக் கூடாது; பூசனைப் பொருளை அனைவருக்கும் கொடுத்த பிறகுதான் பெற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் மகான்கள், தவசிகள், ஞானிகள் முதலியவர்களைப் பார்க்கவே கூடாது; வேதம் ஓதுவதைக் கேட்கவே கூடாது; விலகியிருந்தே வேத விருத்திகளை (வேதமோதும் பிருமணர்களை) கண்ணால் கண்டு தரையில் விழுந்து கும்பிட்டுக் கொள்ள வேண்டும் என்று கூறுவதே *ஹிந்துமதம்.*

(6) பிருமணர்களைத் தவிர வேறு யாரும் வேதம் ஓதவோ, வேதம் ஓதுவிக்கவோ, பூசை செய்யவோ, பூசை செய்விக்கவோ அதிகாரமில்லை. இவர்களாக விரும்பி அரசகுலத்தான், வணிகன், தங்களுக்கு விருப்பமான நம்பிக்கைக்குரிய அரிய தொண்டுகளை செய்தவர்கள், செய்பவர்கள் முதலியவர்களுக்குத்தான் மேற்படித் தடை விதிக்கப் பட்டவைகளைக் கற்பிக்கலாம். அதுவும் அடுத்தவர்க்கு கற்பிக்கக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டுதான் கற்பிக்கலாம் என்று கூறுவதுதான் *ஹிந்துமதம்.*

(7) சமசுக்கிருதத்தின் மூலம் மட்டும்தான் பூசைகள் செய்ய வேண்டும்; அந்த மொழிக்குத்தான் கடவுள் தன்மையுண்டு; அதுதான் வேத மொழி; மற்ற எந்த மொழிக்கும் அந்த அருகதையில்லை என்று கூறுவதுதான் *ஹிந்துமதம்.*

(8) கடவுளிடம் வரங்களைக் கேட்கலாம்; ஆனால், அவர் தன் விருப்பம் போல் கூட்டியோ, குறைத்தோ, மாற்றியோ, திருத்தியோ கொடுப்பார் அல்லது கொடுக்காமலும் இருப்பார் அல்லது தொடர்ந்து பூசை செய்யக் கூடாது என்று தடைவிதித்துச் சாபம் கொடுப்பார் என்று கூறுவதுதான் *ஹிந்துமதம்.*

(9) கடவுளுக்கும், மனிதனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை; கடவுள் பேரொளியோடு தோன்றுவார், அவருடைய பாதம் தரையில் படாது, அவரைப் பார்த்தால் கண் அழுகி விடும், அவர் பேசும் குரலைக் கேட்டால் கூட காது செவிடாகி விடும், அல்லது பைத்தியம் பிடித்து விடும் என்று கூறுவதுதான் *ஹிந்துமதம்*.

(10) கடவுளைப் பற்றிய அனுபவம் ஏதாவது ஊழ்வினையால் ஏற்பட்டால் வெளியே கூறக் கூடாது. வேதம் ஓதி ஒருவரின் துணையோடுதான் அனுபவங்களை வெளியிட வேண்டும், கருத்துக்களைக் கூற வேண்டும், அருளையும் வழங்க வேண்டும். எத்தகைய பெரிய அருளோ, சித்தியோ, முத்தியோ பெற்றிட்டாலும் அவற்றை வேத விருத்திகள் அறிவுரைப்படிதான், அவர்களின் துணையோடும், வழிகாட்டலோடும் செயலாக்க வேண்டும் என்பதுதான் *ஹிந்துமதம்*.

(11) மணு - தமிழ்
மனு - சமசுக்கிருதம்
மண் + அணு => மணு

மண்ணில் உள்ள அனைத்து வகையான அணுக்களுக்கும் நீதியைக் கூறியது மணு எனும் ஆதி மூலப் பதினெண்சித்தர்; **இந்துமதத்**தின் சட்டங்களை எழுதியவர். இந்து ஆற்றங்கரையில் அருட்பா நகரில், இளமுறியாக் கண்டத்தில் நிகழ்ந்தது. இது மணீசக் காலம்.

*ஹிந்துமத*த்திற்கு மனு நீதி மனிதர்களுக்கு நீதி வகுத்தது. மனு என்று ஒருவரே கிடையாது. பொய், ஏமாற்று.

(12) மனிதன் தேவலோகத்திலிருக்கும் தேவர்களின் வேலையாட்களில் ஒருவனாகத்தான் பூசைகளால் மாற முடியும்; தேவனாக மாற முடியாது. இந்த வேலையாட்களின் தகுதி குலத்தாலும், சாதியாலும், செய்தொழிலாலும் வேதம் ஓதியவர்களைத் திருப்திப்படுத்துவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆனால், இவன் என்றைக்கும் தேவனாகவே முடியாது; மனிதன் தேவனாகவே முடியாது; மனிதன் மனிதனாகத்தான்

பிறந்து கொண்டேயிருக்க வேண்டும். இழிந்த சாதி குலத்திலிருந்து உயர்ந்த சாதி குலத்தில் படிப்படியாக முன்னேறிப் பிறப்பதுதான் பூசையின் பயன், நோக்கம் என்பது *ஹிந்துமதம்*.

(13) முற்பிறப்புக்களில் மிகச் சிறந்த பூசைகளையும், தவங்களையும், யாகங்களையும் செய்தவர்களே வேதமோதிகளாகவும், பிருமணர்களாகவும் பிறப்பார்கள். அவர்களே இப்பூவுலகத் தேவர்கள், இம்மண்ணுலகக் கடவுள்கள். அவர்களை வணங்கி வழிபட்டு அவர்களிடம் அருள் பெறுவதுதான் இம்மனிதர்களின் கடன், கடமை என்பது *ஹிந்துமதம்*.

(14) இது மனுவின் பெயரால் எழுதப்பட்டுள்ளது. வேதமோதிகளைத் தவிர, பிருமணர்களைத் தவிர வேறு யாரை வணங்கினாலும் பாவம்; வேறு யாருக்குத் தானம் கொடுத்தாலும் அதனால் சாபமே வரும் என்பது *ஹிந்துமதம்*.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: வேம்படிதாளச் சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

வெளியீடு எண்: 486

# தமிழின மொழி மத விடுதலை

## தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஞானாச்சாரியார் சித்தர் கருவூரார் அருளியது.

1. "தமிழரின் மத உணர்வுகளே!; தமிழின மொழியுணர்வுகளை வளர்க்கும்! வளப் படுத்தும்!! வலிமைப் படுத்தும்!!!"

2. "தமிழரின் மத எண்ணங்களே!; தமிழின மொழி எண்ணங்களை வளர்க்கும்! வளப் படுத்தும்!! வலிமைப் படுத்தும்!!!"

3. "தமிழரின் மதச் சிந்தனைகளே!; தமிழின மொழிச் சிந்தனைகளை வளர்க்கும்! வளப் படுத்தும்!! வலிமைப் படுத்தும்!!!"

4. "தமிழரின் மதக் கருத்துக்களே!; தமிழின மொழிக் கருத்துக்களை விழிச்சி பெறச் செய்யும்! எழிச்சி பெறச் செய்யும்!! செழிச்சி பெறச் செய்யும்!!!"

5. "தமிழரின் மதத் தத்துவங்களே!; தமிழின மொழித் தத்துவங்களை விழிச்சி பெறச் செய்யும்! எழிச்சி பெறச் செய்யும்!! செழிச்சி பெறச் செய்யும்!!!"

6. "தமிழரின் மதச் செயல் சித்தாந்தங்களே!; தமிழின மொழிச் செயல் சித்தாந்தங்களை விழிச்சி பெறச் செய்யும்! எழிச்சி பெறச் செய்யும்!! செழிச்சி பெறச் செய்யும்!!!"

7. "தமிழரின் மத வரலாற்றுப் பேருண்மைகளே!; தமிழின ஒற்றுமை முயற்சிக்கு வெற்றி தேடித் தரும்!"

8. "தமிழரின் மத இலக்கியச் செல்வமே!; தமிழின மொழி ஒருமைப்பாட்டு முயற்சிக்குச் சிறந்த வழியாக! வழிகாட்டியாக! வழித்துணையாக! வழிப்பயனாக! இருக்கிறது!"

9. "தமிழரின் மதக் கொள்கையும், குறிக்கோளுமே!; தமிழின மொழி உரிமைகளையும், பெருமைகளையும் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்றன!"

10. "தமிழரின் மத நம்பிக்கையும், கோட்பாடுமே!; தமிழின மொழி விடுதலையுணர்வை உயிரும், உயர்வுமுடையதாகக் காத்து வருகின்றன!"

11. "தமிழரின் மத விடுதலையே!; தமிழின மொழி விடுதலையை உருவாக்கிடும்!"

12. "தமிழரால் தங்களின் மதத்தை மறுத்தோ! வெறுத்தோ! அன்றி மறந்தோ! துறந்தோ! புறக்கணித்தோ! தங்களுக்குத் தேவையான தமிழின மொழி விடுதலையைப் பெற முடியாது!"

**பதினெண்சித்தர் மடம்,**
**G.N.T.சாலை, காரனேடை,**
**சென்னை-600067.**

<u>**தொடர்பு:-**</u>

சித்தர் கருவூரர் குண்டலினி மையம்,
அண்ணாநகர் மேற்கு விரிவு,
சென்னை-600101.

**//உண்மை நகல்//**
**//மூலம்: 1988இல் குருதேவரால் அச்சிடப்பட்ட அறிவிக்கை.//**

தலைமைப்பீடம்,
8.12.1987.

**இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுத்துக் கொள்ளும் அஞ்சல்.**

# செயல் விளக்கத் திருவோலை

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே; அம்மையப்பன் திருவருளே. உயர்திரு தத்தனேரி சுடலைப் பத்திரகாளி சன்னிதானம் A.இராமர் (25, அருள்தாசுபுரம், மதுரை-18.) அவர்களின் 4.12.87 நாளைய அஞ்சலுக்கு அவசர அவசியமாக விடுக்கும் பதில் திருவோலை. இதனைப் புரிந்து செயல்படுங்கள். **எச்சரிக்கை**.

2) தாங்கள் பலரும் பல இடங்களில் தங்களைப் பற்றித் தவருகப் பேசுவதாகப் புகார் செய்திருக்கிறீர்கள். நன்கு பொறுப்புடனும், பொறுமையுடனும், நிதானத்துடனும் தங்களைப் பற்றி இப்போது சிந்தித்துப் பாருங்கள். ‘வினை விதைத்தவன் வினையை அறுத்துத்தான் தீரவேண்டும்’, ‘கையில் வாள் எடுத்தவனுக்கு வாளால்தான் ஆபத்து’, ‘பாம்பு பிடிப்பவனுக்கு பாம்பால்தான் ஆபத்து’ ... என்ற மூதுரைப் படிதான் இப்போது நீங்கள் பாதிக்கப் பட்டிருக்கிறீர்கள். அதாவது, உங்கள் முன்னிலையில் நம்மவர்கள் ஒருவரை ஒருவர் இழித்தும், பழித்தும், பகைத்தும், நையாண்டி செய்தும் பேசிக் கொண்டிருந்த போதெல்லாம் நீங்கள் யாரையும் கண்டிக்கவில்லை. அதுமட்டுமல்ல, நீங்களே கூட மற்றவர்களுடைய பேச்சுக்களில் பங்கு பெற்றிருக்கின்றீர்கள்.

அன்றைக்கே நீங்கள், **“நமக்குள் ஒருவரை ஒருவர் கேலி பேசக் கூடாது; நமக்குள் யாரும் பகைமை பாராட்டக் கூடாது,**

<u>**பொறுமைப்படக் கூடாது, போட்டி போடக் கூடாது, யாருடைய முன்னேற்றத்தையும் கெடுக்கும் வண்ணம் செயல்படக் கூடாது. குருபாரம்பரியப்படி இரகசியங்களைக் காப்பாற்ற வேண்டும். இந்த 500 கோடி ஆண்டுகளில் பன்னிரண்டாவது பீடாதிபதியாகத் தோன்றியுள்ள குருதேவரைப் பற்றி விமரிசிக்கக் கூடாது. குருவாணைப்படி எல்லோருமே அச்ச கூச்ச இச்சை மாச்சரியங்களைக் கடந்தும் உலகியல்களை மறந்தும், துறந்தும் செயல்பட்டிட தங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். வாலறுந்த நரியைப் போல் வீழ்ச்சி பெற்றவர்கள் மற்றவர்களையும் வீழ்ச்சி பெறுமாறு செய்யக் கூடாது; எதிர்பாராமலோ, தவிர்க்க முடியாமலோ குருதேவருக்கு துரோகமோ, விரோதமோ, குறையோ அல்லது இயக்கச் சட்டதிட்ட விதிகளுக்கு மாறியோ, மீறியோ செயல்பட்டிட்டவர்களை மன்னித்து நம்மோடு சேர்த்துக் கொள்ளாமல் மீண்டும் புண்படுத்தக் கூடாது....**</u>" என்ற நல்ல அறிவுரைகளை எல்லாம் வழங்கியிருப்பீர்களேயானால்; இன்றைக்கு நீங்களே வருத்தப்படக் கூடிய சூழ்நிலை உருவாகி இருக்காது. இதுவே நம் இயக்கத்தவர்களுக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கட்டும். இனிமேல் யார் உங்களைப் பற்றிக் கூறினாலும் வருத்தப்பட வேண்டாம். நீங்கள் தைரியமாக *'குருதேவருக்கு என்னை நன்கு புரியும், மற்றவர்களைப் பற்றி எனக்கு கவலையில்லை'* எனக் கூறி வாழுங்கள்.

3) நீங்கள் முன்பு போலவே பொறுமையின்றி அருட்கணிப்பு செய்யச் சொல்பவர்களிடம் கோபித்துப் பேச வேண்டாம். அதாவது யார் உங்களிடம் எது கேட்டாலும் பணிவுடன் கனிவான குரலில் 'குருவாணை இருப்பதால் தங்களால் அருட்கணிப்புச் செய்ய இயலவில்லை' என்று கூறுங்கள். **"அன்பே சிவம் => அன்பே சீவன்"** என்பதை உணருங்கள்.

**<u>குறிப்பு</u>:-** தென்மண்டல இ.ம.இ. தலைவர் பிறமயோகி M.S.R.உம், தென்மண்டல அ.வி.தி. தலைவர் ச.துரை B.A.யும், அ.வி.தி. தலைமைச் செயலாளர் நெ.சேவுகனும் எம்மால் அருளாட்சிக்காக அவசர அவசிய ஆணைகள் பிறப்பித்துச் செயல்படும் ஆணையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, மேற்படி மூவரில் யாராவது ஒருவரையாவது கலந்துதான் நீங்கள் செயல்பட வேண்டும். அதாவது, இம்மூவரில் யார் ஆணை பிறப்பித்து அ.வி.தி. பணியிலோ அல்லது அருள்வாக்கு, அருட்கணிப்பு, ஞானக்காட்சி முதலிய பணிகளில் ஈடுபடுத்தினாலோ, உடனே அதன்படிதான் செயல்பட வேண்டும். **குருவாணை**. எனவே இம்மூவரில் யார் சுற்றுப்பயணத்துக்கு அழைத்தாலும் உடன் செல்லுங்கள்.

4)

<u>தென்மண்டலம்:-</u> (1) மதுரை, (2) பசும்பொன்னார், (3) இராமநாதபுரம், (4) காமராசர், (5) நெல்லை, (6) அண்ணா, (7) வ.உ.சி., (8) கன்னியாகுமரி, (9) புதுக்கோட்டை, ... முதலிய மாவட்டங்கள்.

<u>நடுமண்டலம் அல்லது கிழக்கு மண்டலம்:-</u> (1) தஞ்சாவூர், (2) திருச்சி, (3) தென்ஆற்காடு, ... முதலிய மாவட்டங்கள்.

<u>வடக்கு மண்டலம்:-</u> 1) வடஆற்காடு, 2) செங்கற்பட்டு, 3) சென்னை மாநகர், ... முதலிய மாவட்டங்கள்.

<u>மேற்கு மண்டலம்:-</u> 1) சேலம், 2) தருமபுரி, 3) கோவை, 4) பெரியார், 5) நீலகிரி, ... முதலிய மாவட்டங்கள்.

இந்தப் பிரிவின்படி 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில் நான்கு மண்டலங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி, இன்றைக்கும் மண்டலத் தலைவர்களையும், அருட்படைத் தளபதிகளையும், அருட்சேனைத் தளபதிகளையும், சாமந்த நாயகங்களையும், மாதண்ட நாயகங்களையும், அருளாட்சி அருளுலக அதிகாரிகளையும், ஐம்பெருங் குழுவினர்களையும்,

எண்பேராயத்தார்களேயும், மண்டலாதிபதிகளேயும், அம்பலத்தார்களேயும், அறங் கூறுபவர்களேயும், பொருட் பண்டாரங்களேயும், அருட் பண்டாரங்களேயும், பாதுகாப்புப் பட்டாள நிறுவனங்களேயும், அருளாட்சி நிர்வாக மேலாளர்களேயும், ஆட்சி வியூக அமைப்பாளர்களேயும், போராட்ட வியூக நாயகங்களேயும் (போர்க்கள வியூக நாயகர்கள்) ... முதலிய இன்னேரன்ன பலவகைப்பட்ட முன்னணிச் செயல்வீரத் தலைவர்களை உருவாக்கிட வேண்டிய அவசர அவசிய நிலையில் இருக்கின்றோம் யாம். எனவே, எக்காரணம் பற்றியும், தங்களைப் போன்ற அனுபவமிக்க அ.வி.தி. செயல்வீரர்களை வீணாக்கி விட மாட்டோம். இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள். குறிப்பிட்ட காலம் அடக்கத்தோடும், அமைதியோடும் அனைவரிடத்தும் அன்போடும், எப்போதும் **குருவாணைப்படி**யே செயல்படுவீர்களேயானால் உங்களுக்குரிய உரிமைகளும், பெருமைகளும் விரைந்து உங்களுக்கு வழங்கப்படும். எனவே பொறுப்போடும், பொறுமையோடும் செயல்படுங்கள்.

5) தாங்கள் அடிக்கடி தென்மண்டலப் பொறுப்பில் உள்ள M.S.R. மாரியப்பன், துரை, சேவுகன் மூவரையும் சந்தியுங்கள். உங்களுடைய செயல்திட்டங்களேயும், கருத்துக்களேயும் அவர்களிடம் கலந்து பேசி; அவர்கள் கூறுகின்ற அல்லது வழங்குகின்ற அறிவுரைப்படியே செயல்படுங்கள்.

6) தங்களுடைய மனைவி தங்களுக்காக உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டிருப்பதால்தான் உங்களுக்கு உரிமையோடு அன்புக் கட்டளை விதிக்கிறார்கள். அதனைத் தவறாக எண்ண வேண்டாம். மிகவிரைவில், நீங்கள் தமிழகம் முழுவதும் செயல்படலாம். உங்களுடைய அருளாற்றலை மிகுதியாக வளர்த்துக் கொள்ளுங்கள். அதற்காக வீட்டிலும், மீனாட்சியம்மன் கோயிலிலும், தத்தனேரி

சுடலையிலும் அடிக்கடி சன்னிதான உடையில் அமர்ந்து நீண்ட ஆழ்ந்த பூசைகளில் செயல்படுங்கள். சோம்பலோ சோர்வோ கூடாது.

7) உங்களுக்கு நமது இயக்க வரலாறுகள், இலக்கியங்கள், தத்துவங்கள், செயல்சித்தாந்தங்கள், கொள்கைகள், குறிக்கோள்கள், நம்பிக்கைகள், நடைமுறைகள், ... முதலியவைகள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் வெறும் வறட்டுத்தனமான, கண்மூடித்தனமான, படிப்பறிவில்லாத பாமரர் போன்று அருட்பணிகளைச் செய்திடாமல்; பிறரோடு உரையாடுவதிலும், தனிமனிதப் பூசைகளில் உரைகள் நிகழ்த்துவதிலும், பொது நிகழ்ச்சிகளிலும், பொதுப் பூசைகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதிலும், நாத்திகர்களுடன் விவாதங்கள் நிகழ்த்துவதிலும், ... உங்களுக்கு மிகப்பெரிய வெற்றிகள் கிடைத்திடும்.

இதற்காக உங்கள் குழந்தைகள் யாரையாவது பயன்படுத்தியோ அல்லது உங்களுக்கு தெரிந்தவரைப் பயன்படுத்தியோ **நாம் இதுவரை அச்சடித்துள்ள அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும், புத்தகங்களையும் நம்மவர்களிடையே உள்ள கையெழுத்துப் பிறதிகளையும் திருப்பித் திருப்பிப் படியுங்கள் அல்லது படிக்கச் சொல்லிக் கேளுங்கள். அப்பொழுதுதான் உங்களுடைய சொற்களில் உள்ள கருத்து வளமும், செய்தி வலிமையும், பொருள் ஆழமும், மொழி அழகும், ... உங்களை முன்னணித் தலைவர்களுள் ஒருவராக்கிடும்.**

**குறிப்பு:-** இதுபோல் தங்களை அறிவுப் பூர்வமாகத் தயாரித்துக் கொள்ளாததால்தான் மிக நெடுங்காலமாக உண்மையான கடுமையான உழைப்பையும், அரிய பெரிய தியாகங்களையும் செய்திட்ட பலர் நம்மிடையில் இருந்தும் அவர்கள் முன்னணித் தலைவர்களாக வளரவில்லை, வளரவில்லை, வளரவில்லை, வளரவே இல்லை. இதற்காக அவர்களை யாம் நேரடியாகவும், மறைமுகமாகவும், அஞ்சல் வழியாகவும் எண்ணற்ற முறை கண்டித்தும் திருந்தவில்லை, திருந்தவில்லை, திருந்தவில்லை, திருந்தவே இல்லை. ஆனால், அவர்கள் மட்டும்

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தங்களுக்கு குருதேவர் முதன்மை தரவில்லை, சிறப்புத் தருவதில்லை, பொறுப்பு தருவதில்லை, பதவி தருவதில்லை, ... என்றெல்லாம் குறை கூறத் தவறுவதே இல்லை. எனவேதான், உங்களுக்கு எழுதப்படும் இச் **செயல் விளக்கத் திருவோலை** மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. அதனால், நீங்களும் இயக்க வரலாற்றில் சிறப்பினையும், முதன்மையினையும் பெறுகின்றீர்கள்.

**அதாவது, குருதேவரின் கண்டிப்புக்கும், தண்டிப்புக்கும் உள்ளாகிறவர்கள் எல்லாம் விரைவில் உயர்வையும், முதன்மையையும், சிறப்பையும், புகழுக்குரிய பயனையும் அடைவார்கள் என்பது உண்மை.** எனவே, இந்த அஞ்சலுக்கு உங்களின் சார்பாகக் குறைந்தது மூன்று பேனா நகல்களாவது அனுப்புங்கள். இந்த அஞ்சல் உங்களை மட்டும் கண்டிக்க எழுதப்பட்டது அல்ல. உங்களைப் போல் தவறு செய்த அனைவரையுமே கண்டிக்க எழுதப்பட்டதாகும். எனவே, இந்தத் திருவோலைக்கு நமது இயக்க இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடம் தரப்படுகிறது. அதனால்தான், இதனை அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சி அம்மன் சன்னிதானம் வெ.செகதீசன் அவர்களுக்கு அனுப்பி உங்களுக்குப் படித்துக் காட்டுமாறும்; உடனே தலைமைப்பீடத்திற்கு இரண்டு பேனா நகல்கள் அனுப்புமாறும்; மதுரை வட்டாரத்தில் நடக்கக் கூடிய நமது நிகழ்ச்சிகளில் படித்துக் காட்டுமாறும்; உங்களுக்கும், M.S.R. மாரியப்பனுக்கும், சேவுகனுக்கும், சிறுமுகைக்கும், வேம்படிதாளத்துக்கும், இராசிபுரத்துக்கும், மற்ற இடங்களுக்கும் கார்பன் நகலெழுதி வழங்குமாறும் **இதன்மூலம் குருவாணை பிறப்பிக்கின்றோம்**. எனவே, தாங்கள் எள்முனை அளவு கூட வருத்தமின்றி இத் திருவோலையை ஏற்றுப் புரிந்து பயன்படுத்துங்கள்.

8) தாங்கள் சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும் நமது அருட்கோட்டங்களில் செயல்படுங்கள். உயர்திரு M.S.R. அவர்களைச் சந்தித்து அவர்மூலம் பலரோடும் அறிமுகம் செய்து கொண்டு இ.ம.இ., அ.வி.தி. உறுப்பினர்களைச் சேர்த்திடுங்கள். புதிய கிளைகளை உருவாக்கிடுங்கள். முடிந்த வரை அவருடைய துணையாளராக இயக்கப் பணிகளில் நம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் செயல்படுங்கள். அவர் இன்னும் தொடர்ந்து தனிமனிதராகவே செயல்பட்டுத் துன்பப் படக்கூடாது. அவரை நம்மவர்கள் நன்கு புரிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

9) தங்களுக்காக தனிப்பட நமது அச்சிட்ட வெளியீடுகள் தேவை என்றால் அனுப்பி வைக்கின்றோம். தாங்கள் கட்டாயமாக இ.ம.இ. கொள்கை விளக்கம், இந்துமத விளக்கம், அருளுலக ஆட்சிமொழி, 64வது நாயனாராக அறிவித்த நூல், தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்? ... முதலிய நூல்களைத் திருப்பித் திருப்பிப் படிக்க வேண்டும். இந்நூல்களில் உள்ள கருத்துக்கள் உங்கள் மனதில் நன்கு ஆழப் பதிய வேண்டும். நமது குருதேவர் அறிக்கையில் முத்துராமலிங்கத் தேவர், ஆதிசங்கராச்சாரியார், இராமகிருட்டிணப் பரம அம்சர், வள்ளலார், மதுரை மீனாட்சி அம்மன், சித்தர் இராமாயணம், சித்தர் பாரதம், ஐயப்பன், சனீசுவரன் ... முதலியவர்களுக்காக வெளியிட்ட சிறப்பு அறிக்கைகளைத் திருப்பித் திருப்பிப் படித்திடல் வேண்டும். காரல் மார்க்சின் வரலாறு பற்றி எழுதியுள்ள தொடர் கட்டுரைகளையும் திருப்பித் திருப்பிப் படித்திடல் வேண்டும்.

10) நமது இயக்கத்தின் செயல்வீரர்களில் முன்னணிக்கு வர விரும்புபவர்கள் தங்களை இந்த அஞ்சலிலுள்ள குறிப்புக்களின்படி அறிவியல் பூர்வமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில்,

**சிவம் என்றாலேயே ஞானம், தெளிவு, விளக்கம், முழுமை, இயற்கை, அழகு, வளம், வலிவு, நலம், நல்வாழ்வு, அன்பு, இன்பம், உயிர், ... என்று 48 வகையான பொருள் உண்டு.** எனவே சீவநெறி => சிவநெறி = இந்துமதம் மறுமலர்ச்சி அடையப் பாடுபடும் நாம் அறிவியல் பூர்வமாகத்தான் வளர வேண்டும். முயலுக.

**ஓலைநாயகம்:-**

அருள்மிகு மாங்காடு காமாட்சி அம்மன் சன்னிதானம் பா.மோகன்.

**அன்பு**

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**

**8-12-87.**

கட்டாயமாக உடனே இரண்டு பேனா நகல்களும், 1+1 = 2x3 = 6 கார்பன் நகல்களும் அனுப்பு - **குருவாணை.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு பா.மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பமும் அடிக்குறிப்பும் இருந்தது.//**

29 DEC 1987.

# சத்தி அண்டத்துத் தேவதேவியின் அருளாட்சிப் பரிந்துரையின்படி வழங்கப்படும் நிறுவன நிருவாக அதிகாரிகள் பற்றிய குருவாணை.

1) இ.ம.இ.க்கும் அதன் கீழுள்ள 48 வகையான நிறுவன நிருவாகங்களுக்கும் இந்த மண்ணுலகில் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் அருளுலகத்தார்க்கும், பொருளுலகத்தார்க்கும் முறையாகவும், முழுமையாகவும் அறிவித்துச் செய்திடும் வாழ்க்கைத் துணை மூலம் உருவாகக் கூடிய விந்துவழி வாரிசுகளே முறைப்படி பயிற்சிகளையும், முயற்சிகளையும் செய்து வாழையடி வாழையாக நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் இருந்து தலைவர்களாக அருளுலகப் பொருளுலக ஆட்சிகளை நிகழ்த்துவார்கள்.

இதன்படி பதினெண்சித்தர் பீடமும், பீடத்தின் நேரடி வாரிசுகளும் தங்கள் தங்களுடைய தேவைகளுக்கேற்ப அந்தந்த வட்டாரங்களுக்குக் கூட்டாகத் தலைவர்களை, நாயகங்களை, செயலாளர்களை, மந்திரிகளை (அமைச்சர்களை), படைத் தளபதிகளை, சேனாதிபதிகளை, அதிகாரிகளை, ஐம்பெருங் குழுவினர்களை, எண்பேராயத்தார்களை, மண்டலாதிபதிகளை, அம்பலத்தார்களை, அறங் கூறுபவர்களை, பொருட் பண்டாரங்களை, அருட் பண்டாரங்களை, பாதுகாப்புப் பட்டாள நிறுவனங்களை, அருளாட்சி நிர்வாக மேலாளர்களை, ஆட்சி வியூக அமைப்பாளர்களை, போராட்ட வியூக நாயகங்களை, மன்றத்தார்களை, தமிழ்ச் சங்கத்தார்களை, அருட்பணி விரிவாக்கத் திட்டத் திருச்சபையார்களை, பீடாதிபதியின் பதிலிகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

2) இ.ம.இ.யின் தலைமைப் பதவி தவிர மற்ற எதுவும் பாரம்பரியமாக வழங்கப்பட மாட்டாது. ஆனால், அ.வி.தி.யைப் பொறுத்தவரை அருட்சத்தி, சித்தி, முத்தி ... முதலியவைகள் பாரம்பரியமாக முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்திட அருளுலக ஒப்புதல் உண்டு. இருப்பினும், பீடாதிபதியாக இருப்பவர்கள் அல்லது பீடாதிபதி தோன்றாத காலத்தில் பீடத்தில் அமர்ந்திருக்கும் பீடாதிபதியின் வாரிசுகள், அ.வி.தி. செயல்வீரர்களின் போக்குகளிலும், நோக்குகளிலும், செயல்களிலும் குறைபாடுகளும், கேடுகளும், பிறர்க்கு அழிவும் இருப்பதாகக் கண்டறிந்தால் அருளுலகப் பாரம்பரிய உரிமைகளைத் **<u>தற்காலிகமாக</u>** எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தடைசெய்து நிறுத்தலாம். அதாவது, குறிப்பிட்ட தனிமனிதர்கள் அ.வி.தி.யில் பாரம்பரிய அருளாற்றல்களைத் துய்ப்பது எந்த நேரத்திலும் தடை செய்யப்படலாம்.

3) சீவ (சிவ) அண்டங்களுக்குள் விரைவில் ஞானாச்சாரியார், இந்துமத ஆச்சாறியார், தமிழின ஆச்சாரியார், இந்துமதத் தந்தை, அருளாட்சித் தலைவர், குவலய குருபீடம், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தமது அருட்போரினை மிகப்பெரிய வெற்றி நிலையில் துவக்கப் போகிறார். ஆனால், இது சற்றும் எதிர்பாராத அளவில் சத்தி அண்டத்தவர்களின் கூட்டு முயற்சியால் சத்தி அண்டத்தைத் தாண்டிச் செல்லும் காலம் நீட்டிக்கப்படுகிறது. போர் கடுமையாக மூண்டு விட்டது.

இதன் காரணமாகத் திடீர் திடீரென்று சத்தி அண்டத்திலிருந்து அண்டபேரண்ட இராக்கம்மாக்கள், இராக்காச்சிகள், பேய்ச்சிகள், பிசாசினிகள், சண்டிகள், சாமுண்டிகள், மாடன், சாத்தான் முதலியவைகளின் இனத்தைச் சேர்ந்த சுமார் மூன்றடி உயரத்திற்கும் குறைவான, வலிமைமிக்க பெண்கள்; மிகப்பெரிய வடிவங்களை

உடைய பூதகிகள், கிங்கரிகள், தூதிகள், கணங்கிகள், ... என்று பலரும் கடுமையான கோபத்தோடு இம் மண்ணுலகில் உள்ளவர்களோடு போரிட்டுப் பல்வேறு வகையான தாக்குதல்களையும் நிகழ்த்துகிறார்கள்.

இதில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாலேயே *(குறிப்பு:- இவர் தமது பாலுகப் பருவத்திலேயே அண்டபேரண்டங்களில் பலமுறை பயணம் செய்தவர்; சுமார் 11 முதல் 12 வயது முடியும் வரை இம்மண்ணுலகில் தமது உடலை மட்டும் நடைப்பிணமாக விட்டு விட்டு வானம், ஆகாயம், விண்வெளி, பரவெளி, அண்டவெளி, அண்டபேரண்டப் பெருவெளி, பாழ்வெளி, ... முதலியவற்றில் சுற்றித் திரிந்தும், 108 திருப்பதி அண்டங்கள், 243 சத்தி அண்டங்கள், 1008 சிவாலய அண்டங்கள் முதலியவைகளின் முக்கால அருளாட்சி நிலைகளையும் முறையாகவும், நிறையாகவும் உற்று நோக்கிக் கற்றுத் தேர்ந்தவர். ஏனென்றால் இவர்தான் 48 பீடாதிபதிகளிலும் விண்ணையும் மண்ணையும் இணைக்கக் கூடிய பீடாதிபதி.)* நிர்ணயிக்க முடியாத விண்வெளியினர்கள், குறிப்பாகச் சத்தி அண்டத்தைச் சேர்ந்தவர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். எனவே, யாருக்கு எந்த ஆபத்து ஏற்படும் என்பதைக் கணிக்கவே முடியவில்லை.

எனவேதான், அருளாட்சி அமைப்புப் பணியின் நிருவாகப் பொறுப்புக்களைக் கவனிக்கச் சத்தி அண்டத்திலிருந்து வந்துள்ள தேவதேவியால் நம்மவர்களில் அருளுலகப் பயிற்சிகளிலும், முயற்சிகளிலும், அருட்சித்திகளிலும் தேவைக்கேற்ற அளவு நல்ல வலிமை பெறாதவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காகவே தற்காலிக நீக்கங்கள், தடைகள், கண்டிப்புக்கள், பூசைமுறை மாற்றங்கள், அருட்பட்ட மாற்றங்கள், பயிற்சி மாற்றங்கள், அவரவர் விருப்பப்படி ஓய்வுகள், விடுப்புகள், விதிவிலக்குகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, இவற்றை நம்மவர்கள் புரிந்து கொண்டு பொறுப்போடும், பொறுமையோடும், அடக்கத்தோடும், அமைதியோடும், சமாதானத்தோடும்,

நிதானத்தோடும் குருவாணைக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்க முற்படுங்கள்.

குறிப்பாகச் சேனாதிபதிகள், படைத் தளபதிகள், நாயகங்கள், செயலாளர்கள் என்றிருப்பவர்களுக்குக் கடுமையான சோதனைகள் வந்து கொண்டிருக்கின்றன, வந்து விட்டன. எனவே, இந்தப் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாம் அடிக்கடி குருதேவரோடு தொடர்பு கொண்டு தங்களுக்கு உடல்நலப் பாதிப்போ, உயிர்நலப் பாதிப்போ, பொருளுலகப் பாதிப்போ, அருளுலகப் பாதிப்போ ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

4) அண்மையில் குருதேவர் 22.12.87 முதல் 27.12.87 முடிய தென்மண்டல அருளாட்சியின் பொருட்டு நிகழ்த்திய சுற்றுப்பயணங்களில் பலருக்கும் கடுமையான குருவாணைகள் விதித்துச் செயல்பட நேரிட்டது. எனவே, யாரும் அதற்காக வருந்தத் தேவையில்லை. **எவரும் எக்காரணம் பற்றியும் குருவாணை பெற்றவர்களைத் தோல்வியுற்றவர்களாகவோ அல்லது தண்டிக்கப்பட்டவர்களாகவோ நினைக்கத் தேவையில்லை. குருதேவர் வழங்கும் கண்டனைகளும், தண்டனைகளும் பிறரைத் திருத்த வேண்டும் என்பதற்காகத்தான்; யாரையும் வேண்டாம் என்று விலக்குவதற்காக அல்ல.** எனவே, யாரும் வருந்த வேண்டாம், பிறரை வருத்தப்படுத்த வேண்டாம்.

5) இன்று பிறவாக ஆண்டு மார்கழித் திங்கள் 14ஆம் நாள் (29.12.1987) முதல் நம்மவர்கள் வெளியிடக் கூடிய அறிக்கைகளிலும், அறிவிக்கைகளிலும், புத்தகங்களிலும், செயல்திட்ட ஆவணங்களிலும் கீழ்க்கண்டவாறு தொடர்பு முகவரிகளை வரிசைப்படுத்துமாறு தேவதேவியின் பரிந்துரை வழங்கப்படுகிறது.

1. பதினெண்சித்தர் பீடக் கருகுலம், காரனோடை, சென்னை.

பொறுப்பாளர் பிறம்மாச்சாரியார் சி.கவிக்குமார், C/O சித்தர், ESI மருந்தகம், செம்பியம், சென்னை-11.

2. பதினெண்சித்தர் பீடக் குருகுலம், காரியேந்தல்பட்டி, மதுரை மாவட்டம்.

செயலாளர், பரமாச்சாரியார் நெ.சேவுகன், C/O காதி வசுத்திராலயம் (GRNS), கொட்டாம்பட்டி, மதுரை மாவட்டம்-625103.

3. பதினெண்சித்தர் பீடத் தருகுலம், வேம்படிதாளம்.

காப்பாளர் கபாலீசுவரி சன்னிதானம் சித்தரடியார் சீ.மணி, 2/24, புதிய வீதி, வேம்படிதாளம், சேலம் மாவட்டம் - 637504.

4. பதினெண்சித்தர் பீடத் திருகுலம், தொடைதட்டி அருணசலசாமி மடம்; சலவன்பேட்டை, வேலூர்.

காப்பாளர் அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் சித்தரடியார் பெ.சுப்பையா, 47, பெரிய கழனிக்காட்டுத் தெரு, வேலப்பாடி, வேலூர், வடஆற்காடு மாவட்டம்-632001.

5. தென்மண்டல இ.ம.இ. தலைவர்.

பிறமயோகி, சித்தரடியார் M.S.R. மாரியப்பன், 49-A, டவுன்ஹால் ரோடு, மதுரை-625001.

6. தென்மண்டல அ.வி.தி. தலைவர்.

ஆலவாய் மதுரைமாமூதூர் தத்தனேரி சுடலை பத்திறகாளி சன்னிதானம், சித்தரடியார் ச.துரைராசன், 115, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை-625010.

7. மேற்கு மண்டல இ.ம.இ. தலைவர்.

மரப்பறை அங்காள பரமேசுவரி சன்னிதானம், சித்தரடியார் இர.கங்காதரக்குமார், 17, கவரைத் தெரு, இராசிபுரம், சேலம் மாவட்டம்-637408.

8. மேற்கு மண்டல அ.வி.தி. தலைவர்.

அருள்மிகு இராசிபுரம் ஐந்தொழில் வல்ல சிவபெருமான் சன்னிதானம், சித்தரடியார் வ.பன்னீர்செல்வம், C/O, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அச்சகம், 30, சேலம் மெயின்ரோடு, இராசிபுரம், சேலம் மாவட்டம்-637408.

9. <u>வடக்கு மண்டல அ.வி.தி. தலைவர்.</u>

அருள்மிகு கருமாரியம்மன் சன்னிதானம், சித்தரடியார் ந.சண்முகம், புத்தகரம் கிராமம், யூனியன் சாலை, இலட்சுமிபுரம், சென்னை-600099.

10. <u>வடக்கு மண்டல இ.ம.இ. தலைவர்.</u>

அருள்மிகு பச்சைமலை வீரப்பட பத்திறகாளி சன்னிதானம் சித்தரடியார் இரா.சீனிவாசன், C/O குமார் B.Sc., 40, 4வது பிரதானச் சாலை, சவகர் நகர், சென்னை-600082.

11. <u>கிழக்கு மண்டல அ.வி.தி. தலைவர்.</u>

அருள்மிகு அம்பகரத்தூர் பத்திரகாளி சன்னிதானம் சித்தரடியான் A.P.திருஞானசம்பந்தம், 26N, அகிலாண்டபுரம், திருவையாறு, தஞ்சை மாவட்டம்-613204.

12. <u>கிழக்கு மண்டல இ.ம.இ. தலைவர்.</u>

அருள்மிகு நன்செய்காள குலவிளக்கம்மன் சன்னிதானம், சித்தரடியான் தொ.பொன்னுசாமி, 16, முதல் குறுக்குத் தெரு, ரெட்டிகாடு, ச.பே.புதூர், நாமக்கல், சேலம் மாவட்டம்-637002.

அன்பு

**அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை,**
**குவலய குருபீடம், ஞானச்சாரியார்,**
**நிறையக்ளுர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்,**
**அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,**
**பதினெண்சித்தர் பீடம், பதினெண்சித்தர் மடம்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
29-12-87.

**<u>பின்குறிப்பு:</u>**

<u>I. தென்மண்டலம்:</u> 1) மதுரை, 2) பசும்பொன்னூர், 3) இராமநாதபுரம், 4) காமராசர், 5) நெல்லை, 6) அண்ணா, 7) வ.உ.சி., 8) கன்னியாகுமரி, 9) புதுக்கோட்டை, ... முதலிய மாவட்டங்கள் அடங்கியது.

<u>II. நடுமண்டலம் அல்லது கிழக்கு மண்டலம்:</u> 1) தஞ்சாவூர், 2) திருச்சி, 3) தென் ஆற்காடு, ... முதலிய மாவட்டங்கள் அடங்கியது.

<u>III. வடக்கு மண்டலம்:</u> 1) வடஆற்காடு, 2) செங்கல்பட்டு, 3) சென்னை, ... முதலிய மாவட்டங்கள் அடங்கியது.

<u>IV. மேற்கு மண்டலம்:</u> 1) சேலம், 2) தருமபுரி, 3) கோவை, 4) பெரியார், 5) நீலகிரி, ... முதலிய மாவட்டங்கள் அடங்கியது.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது. இறுதியில் குருதேவரின் கையொப்பம் இடப்பட்டிருந்தது.//**

11-1-88,
தலைமைப்பீடம்.

இந்து மறுமலர்ச்சி இயக்க மாநிலச் செயலாளர் திரு ஞானசேகரன் அவர்களுக்கும், இ.ம.இ.யின் சேலம் மாவட்டத் தலைவர் திரு குழந்தைவேலு அவர்களுக்கும்,

இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவர், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் விடுக்கும்

# செயல் விளக்கத் திருவோலை

1) அனைத்தும் அருளாட்சிக்காகவே! எல்லாம் அருட்போர்க்கால நடவடிக்கையே!

2) அருளாட்சி நாயகத்தை வழிநடத்தும் அண்ட பேரண்டத்தவர்களின் பரிந்துரைகள் நொடிக்கு நொடி மாறிமாறி வழங்கப்பட்டாலும் அவை உடனுக்குடன் **குருவாணையாக** வழங்கப்படுவதுதான் மரபு. இந்துமதம் இம் மண்ணுலகின் வயதான 500 கோடியாண்டுகளை விடப் பழமையானது என்பதால்; இ.ம.இ.க்கும், அதன் கீழுள்ள 48 வகை நிறுவன நிருவாகங்களுக்கும் தேவையான வழிகாட்டிகளும் (Guides), அறிவுரை கூறுபவர்களும் (Advisors), கண்காணிப்பாளர்களும் (Controllers) அண்ட-பேரண்டங்களில் இருந்துதான் வருவார்கள். எனவே, மண்ணுலகத்தவர்கள் அந்த அண்டபேரண்டத்தவர்களின் சொல்படிதான் இ.ம.இ.யை நடத்த வேண்டும். இப் பேருண்மையை உணராதவர்கள் அருள் இயக்கத்தில் முறையாகவும், நிறைவாகவும் செயல்படுவது அரிது.

மேலும், அருளாணை, மருளாணை, கருவாணை, தருவாணை, திருவாணை, குருவாணை எனப்படும் 6 வகையான ஆணைகளையும் உடனுக்குடன் மன நிறைவோடும், சிந்தனை நிறைவோடும் ஏற்றுச் செயல்படாதவர்கள்; காலப்போக்கில் அருளுலகத்தாரின் ஆதரவையும், அருட்சத்தியையும், சித்தியையும் இழக்க நேரிடும். இவற்றைப் புரிந்தே நம்மவர்கள் செயல்பட வேண்டும். இப் பேருண்மைகளை தாங்கள் இருவரும்தான் சேலம் மாவட்டத்தார்களுக்கு உணர்த்த வேண்டும். ஏனென்றால், பலருக்கு இது புரியவில்லை.

3) **இம் மண்ணுலகின் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் காலத்தில்தான் கருகுலம், குருகுலம், திருகுலம், தருகுலம் ஆகியவை அமைக்கப்படுகின்றன.** அதன்படி, இப்போது 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியான எமது காலத்தில்தான் தருகுலம் தங்களது சேலம் மாவட்டம் வேம்படிதாளத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. **இந்தத் தருகுலம் உலகத்திற்கே ஒன்றே ஒன்றுதான்**. தங்களது மாவட்டத்தில் இப்படிப்பட்ட தருகுலம் அமைந்திருப்பது கண்டு சேலம் மாவட்டத்தவர்கள் அனைவரும் பெருமைப்பட்டே ஆகவேண்டும். இந்தக் கருகுலம், திருகுலம், குருகுலம், தருகுலம் நான்கும்தான் இ.ம.இ.க்கும், அதனைச் சார்ந்த 48 வகை அமைப்புக்களுக்கும் தலைமையிடங்கள் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, சேலம் மாவட்டத்தவர்கள் வாரம் ஒருமுறையோ அல்லது மாதம் ஒருமுறையோ அவசியம் தருகுலத்திற்குச் சென்று வரவேண்டும் என்பதை அனைவருக்கும் கூறிடுங்கள்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை இ.ம.இ.க்கு மேற்கு மண்டல இ.ம.இ. தலைவர் கங்காதரக் குமார் அவர்களது வீடும், அ.வி.தி.க்கு தருகுலமும் தலைமையகங்களாக நியமிக்கப்பட்டுள்ளதால்; இ.ம.இ. சம்பந்தப்பட்ட எல்லாக் கடிதத் தொடர்புகளும்,

விளக்கங்களும் இராசிபுரத்திலும்; அ.வி.தி. சம்பந்தப்பட்ட எல்லாக் கடிதத் தொடர்புகளும், விளக்கங்களும் வேம்படிதாளம் தருகுலத்திலும்தான் அனைவரும் சென்று பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், **<u>ஒவ்வொரு தனிமனிதருக்கும் தனித்தனியாக கடிதம் வரைவது என்பது தற்போதைய பொருளாதார நிலையில் மிகுந்த சிரமம் ஏற்படுத்தி விடும்</u>**. எனவே, இராசிபுரம் செல்பவர்கள் மேற்கு மண்டல இ.ம.இ. தலைவர் திரு கங்காதரக் குமார், மேற்கு மண்டல அ.வி.தி. தலைவர் திரு பன்னீர்செல்வம் ஆகியோரைச் சந்தித்து விவரம் அறியலாம். இந்தச் செய்தியினை தங்களது மாவட்டத்தார்களுக்கு தாங்கள் இருவரும்தான் கூறிட வேண்டும்.

இ.ம.இ. சம்பந்தப்பட்ட செயல்நிலைகள், செயல்பாடுகள் அறிவிப்பது போன்ற செய்திகள் இருந்தால்தான் தங்கள் இருவருக்கும் கூட கடிதங்கள் அனுப்பப்படும். அதாவது, இதைக் கண்டு தங்களது மாவட்டத்தார்கள் யாரேனும் தனக்குத் தனிப்பட்டுக் கடிதம் வரவில்லையே என்று வருந்த வேண்டாம் என்பதை அனைவருக்கும் அறிவித்திடுங்கள்.

4) இந்து மறுமலர்ச்சி இயக்கம் தலைமைக்குக் கட்டுப்பட்ட ஒரு புரட்சி இயக்கம் என்பதை அவ்வப்போது பலர் மறந்து செயல்படுவதைக் காரணம் கொண்டே மேலே குறிப்பிட்ட ஒரு சிலவற்றை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறி விளக்கம் அளித்திட தங்களுக்குப் பணிக்கிறோம். எனவே, சேலம் மாவட்டம் விரிந்தும் விரைந்தும் செயல் பெற்றிட தாங்கள் இருவரும் தவறாது மாவட்டத்திலுள்ள எல்லா கிளைகளுக்கும் சென்று இ.ம.இ. அலுவலகங்களை அமைத்துச் செயலாக்குவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்திடுங்கள்.

**(**) அ.வி.தி.க்குக் கட்டுப்பட்டதுதான் இ.ம.இ. என்பதால்; இ.ம.இ.யில் இருப்பவர்கள் தங்களுடைய பயிற்சிகளுக்கும், முயற்சிகளுக்கும், தேர்ச்சிகளுக்கும் ஏற்பத்தான் காலப்போக்கில் அ.வி.தி.யில் செயல்பட ஆரம்பிக்க வேண்டும்.** அதாவது, சாதாரணமாக தமிழ்மொழிப் பற்று, தமிழினப் பற்று, தமிழ்நாட்டுப் பற்று, கலைத்துறையில் ஆர்வம், பொதுத் தொண்டில் ஆர்வம், ... என்ற பண்புநலன்களை உடையவர்கள் இ.ம.இ.யில் நேரடியாகப் பங்கு பெற்றுச் செயல்பட ஆரம்பித்திடலாம். ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலாக மிகுந்த நெஞ்சுறுதியும், சிந்தைத் தெளிவும், எதையும் எதிர்த்து எதிர்நீச்சல் போடும் புரட்சிமிகு உணர்வும், அருளுலகப் பயிற்சிகளை எல்லாம் செய்யக்கூடிய புதுமை நாட்டமும், உலகியலுக்கு அப்பாற்பட்டு தாடி மீசை தலைமுடி எல்லாம் தொடர்ந்து வளர்த்துக் கொண்டு மிகுந்த தன்னம்பிக்கையோடு செயல்படக் கூடிய மாவீரப் பண்புடையவர்களால்தான் (அ.வி.தி.யில்) அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் உறுப்பினராகப் பங்கேற்றுச் செயல்பட முடியும்.

அதாவது, அ.வி.தி.யில் செயல்படுவது என்றால் குருதேவரையும், குருதேவரின் பதிலிகளையும், குருவாணைகளையும், அவ்வப்போது குருவாணை பெற்றுச் செயல்பட வருபவர்களையும், தாத்தாக்கள் ஆத்தாக்களாகவே மதித்து, முழுமையாக ஏற்றுப் போற்றிப் பணிந்து அடக்கத்தோடும், பொறுப்போடும், பணிவோடும் உடனுக்குடன் செயல்படுபவர்களாக இருக்க வேண்டும். குருபாரம்பரிய இரகசியங்களையும், உறுதிமொழிகளையும் உயிரினும் மேலாக மறையாகப் போற்றிக் காப்பவர்களாக இருக்க வேண்டும். அ.வி.தி. செயல்திட்டங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்காகவே

தங்களுடைய வாழ்க்கையை முழுமையாக விருப்பத்தோடு அர்ப்பணிப்பவர்களாக இருக்க வேண்டும்.

மேலும், அவர்கள் அருளாட்சி நாயகத்தின் நம்பிக்கைக்கும், அருளாட்சி நிருவாகத்திற்காக விண்வெளியிலிருந்து வந்திருக்கும் தேவதேவியின் நம்பிக்கைக்கும், அன்புக்கும் உரியவர்களாக, ... ஆகிடல் வேண்டும். இது மிகமிகச் சிக்கலான, கடினமான செயல்முறையாகும். எனவேதான், **யாம் இ.ம.இ. தலைவர் என்ற முறையிலும், அ.வி.தி. தலைவர் என்ற முறையிலும், அருளாட்சி நாயகம் என்ற முறையிலும், ஞானாச்சாரியார் என்ற முறையிலும், கருவறை மூலவர்களின் அம்மையப்பர் என்ற முறையிலும், ... வாழ்க்கையில் போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லாதவர்களையும், நிறைய கடமைகளை உள்ளவர்களையும், உலகியல் காரணமாக தாடி முடி மீசை வளர்க்க முடியாதவர்களையும், குருவாணைப்படி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று செயல்பட முடியாதவர்களையும், ஊழ்வினை, சூழ்வினை, விதி, ஆள்வினை, ... முதலியவை சரியாக அமையப் பெறாதவர்களையும், ... முன்னெச்சரிக்கையாகவே தடுத்து நிறுத்தி அருள் உள்ளத்தோடு அவர்களை அ.வி.தி.யில் செயல்பட வேண்டாம் என்று தடை விதிக்கிறோம்.**

ஆனால், இதைப் புரிந்து கொள்ளாத பலர் அன்புச் சிந்தையோடும், அருள் நெஞ்சத்தோடும் செயல்பட்டிடும் குருதேவராகிய எம்மையே புரிந்து கொள்ளாமல் தங்களுடைய விருப்பம்போல், அரைகுறையாகத் தெரிந்து கொண்ட பூசைமுறைகளையும் அச்சிட்டு வழங்கியுள்ள அருளூறு பூசைமொழிகளைக் கூறி மந்திரிக்கவும், பேயோட்டவும், பரிகாரங்களைச் செய்யவும், மந்திரவாதிகளை எதிர்த்துத் தடைக்கட்டவும், விரைந்து

அருள்நலம் விளைவிக்கவும் முற்படுகின்றார்கள். ஆனால், இவற்றால் எந்த நேரத்திலும் இவர்களுக்கு எத்தகைய மிகப்பெரிய ஆபத்தும் ஏற்படலாம். சிறுகச் சிறுக உடல்நலம், பொருள்நலம், யோகநலம், முகப்பொலிவு, மனஅமைதி, ... முதலியவை எல்லாம் நீரில் உப்பு கரைவதுபோல் கரைந்து விடும். எனவே, இதுபற்றிய எச்சரிக்கையையும் நீங்கள்தான் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும்.

யாருக்கு எத்தகைய சந்தேகம் வந்தாலும் உடனுக்குடன் குருதேவருக்கு எழுதித்தான் பெற வேண்டும் என்ற மரபினையும் தாங்கள்தான் செழிப்பாக வளர்க்க வேண்டும். தங்களுக்கு வரக்கூடிய எந்த அஞ்சலையும் ஒரு பேனா நகலாவது எழுதி அவசியம் தலைமைப் பீடத்திற்கு அனுப்பியாக வேண்டும். இதை அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள்.

வேம்படிதாளம், இராசிபுரம் சென்று அஞ்சல்களைப் படித்தும், நகலெடுத்தும் செயல்படுக! குருவாணை!

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**

**11-1-88.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் குருமார் இரா.வெங்கடேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

தலைமைப்பீடம்,
22.11.1988,
இரவு 9-15 மணி.

# குருபாரம்பரிய வாசகங்கள் சில ...

1) "குருதேவருக்குள் நாம், நமக்குள் குருதேவர் என்று முழுமையாக நம்பி எதையும் கண்மூடித்தனமாக செய்யக் கூடிய குருபத்தி ஒன்று மட்டும் இருந்தால் போதும்; பெறமுடியாத சித்தி என்று வேறு எதுவும் இருக்க முடியாது."

2) "சோறு வெந்து இறக்கப் போகும் போது பானை உடைந்த கதையாக எண்ணற்றோர் சித்திக்கு ஏங்கும் நிலைகளைப் பெறுவதுதான் அருளுலகின் மெய்யான வரலாறு. இந்த வரலாற்றை, வரலாற்று நாயகர்களான பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டுமே தங்கள் தங்கள் காலங்களில் வெல்லுகிறார்கள். ஆனால், **உலக மாயைகளாலும், சொந்த பந்த ஆசாபாசங்களாலும், பேராசைகளாலும், தன்னல வெறிகளாலும், அகம்பாவ ஆணவப் போக்குகளாலும், நோக்குகளாலும் பதினெண்சித்தர் பீடாதிபதியைத் தொடர்ந்து நடப்பவர்களுள் எண்ணற்றோர் கண்ணற்றோராகி கடைசி வரை செல்ல முடியாமல் இடைவெளியிலேயே நின்று விடுகிறார்கள்**. அதுவே விதி! அதுவே ஊழ்வினை! அதுவே சாபம்!..."

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

7-4-88.

*இரயில் பயணத்தின் போது கூறிய குறிப்புகள்.*

# <u>அரசபாரம்பரியக் குறிப்புக்கள்</u>

1. தாத்தா நான்கு வேதங்களுக்கும் நான்கு வேளிர்களை உருவாக்கினர்.

I. இருக்கு வேதம் = இருக்கு வேளிர் => *<u>தலைநகரம்:</u>* கொடும்பாளூர்.

II. சாம வேதம் = சம்புவரையர் (சாமவேதவரையர்) => காஞ்சி.

III. அசுர வேதம் = .....(*) => கும்பகோணம்.

IV. அதர்வான வேதம் => வானவரையர் (அதர்வான வேதவரையர்) => தஞ்சாவூர்.

[*(*) கிடைத்த நகலில் இந்த இடத்தில் எந்தச் சொல்லும் இல்லாமல் புள்ளிகள்தான் இருந்தன. குருதேவர் கூறிய சொல் எழுதும்போது நினைவுக்கு வாராமல் இருந்ததனுல் இதுபோல் விடப்பட்டிருக்கலாம்.*]

இருக்கு வேதம் = 108 சிவாலயங்கள்.

அசுர வேதம் = 243 சிவாலயங்கள்.

சாம வேதம் = 1008 சிவாலயங்கள்.

அதர்வான வேதம் = 1359 சிவாலயங்கள்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

**“இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**

**– குருபாரம்பரிய வாசகம்.**





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

“குருதேவருக்குள் நாம், நமக்குள் குருதேவர்
என்று முழுமையாக நம்பி எதையும் கண்மூடித்தனமாக
செய்யக் கூடிய குருபத்தி ஒன்று மட்டும் இருந்தால் போதும்;
பெறமுடியாத சித்தி என்று வேறு எதுவும் இருக்க
முடியாது.”

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org

https://gurudevar.in https://gurudevar.org

https://induism.org Email: indhuism@gmail.com